வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: நாராயணசாமி

தேதி: 17.08.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

தலைப்புச்செய்திகள்

தலைநகர் டெல்லியில் போக்குவரத்து நெரிசலை குறைக்க பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று 2 பெரிய தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை தொடங்கி வைத்தார்.

தேர்தல் ஆணையம் அனைத்து அரசியல் கட்சிகளையும் சமமாக நடத்துகிறது என்று தலைமை தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் மின்னணு பொருட்களின் ஏற்றுமதி நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், அதிகரித்து உள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இந்திய ராணுவத்தின் தென்னக படைப்பிரிவின் தலைமை அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் தீரஜ் சேத் இன்று புதுச்சேரியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை சந்தித்து பேசியுள்ளார்.

மோடி (12)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புடைய 2 பெரிய தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை தொடங்கி வைத்தார். இத்திட்டத்தில் துவாரகா விரைவுச்சாலையின் டெல்லி பிரிவு மற்றும் நகர்புற விரைவுச் சாலை ஆகியவை அடங்கும். துவாரகா விரைவுச் சாலையின் டெல்லி பிரிவு மற்றும் நகர்புற விரைவுச் சாலை II ஐ திறந்து வைப்பதன் மூலம் டெல்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் குறைக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார். இதேபோல், துவாரகா விரைவுச் சாலையின் 10.1 கிலோ மீட்டர் நீளமுள்ள டெல்லி பகுதி சுமார் 5 ஆயிரத்து 300 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப் பட்டுள்ளது. இது, டெல்லியின் போக்குவரத்து நெரிசலை பன்மடங்கு குறைக்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

*பாஜக நாடாளுமன்ற குழு* (10)

பாரதிய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற குழு கூட்டம் இன்று புதுடெல்லியில் நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகிறது. இக் கூட்டத்தில், குடியரசு துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் குறித்து விவாதம் நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகிறது. குடியரசு

துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை வரும் வியாழக்கிழமை வரை தாக்கல் செய்யலாம் என்றும், தேர்தல் அடுத்த மாதம் 9 ஆம் தேதி நடைபெறும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. குடியரசு துணைத் தலைவராக இருந்த திரு ஜக்திப் தன்கர் அண்மையில் ராஜினாமா செய்ததை அடுத்து, புதிய குடியரசு துணைத் தலைவரை தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தப்பட உள்ளது குறிப்பிடத் தக்கது.

*பியூஷ் கோயல்* (13)

இந்தியாவில் மின்னணு பொருட்களின் ஏற்றுமதி நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் பெருமளவிற்குஅதிகரித்து உள்ளதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். கடந்த நிதியாண்டின் முதல் காலாண்டை விட, இது 47 சதவிகிதம் உயர்ந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் மூலம் இந்த வெற்றி ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். கடந்த 2014-15 ஆம் நிதியாண்டில் 31 பில்லியன் டாலராக இருந்த ஏற்றுமதி தற்போது 133 பில்லியன் டாலர்களாக அதிகரித்து உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். 2014 ஆம் ஆண்டில் வெறும் 2 செல்போன் உற்பத்தி

நிறுவனங்கள் இருந்த நிலையில், தற்போது, இது 300 க்கும் மேல் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். உற்பத்தியில் தற்சார்பை மேற்கொண்டதன் மூலம் இது சாத்தியமானதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையர் 1 (6)

அரசியல் கட்சியினரிடையே பாகுபாடு காட்டாததால் அனைத்து அரசியல் கட்சிகளும் சமம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. புதுடெல்லியில் இன்று பிற்பகல் ஊடகங்களுக்கு விளக்கம் அளித்த தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார், தேர்தல் ஆணையம் அதன் அரசியலமைப்பு கடமையில் இருந்து ஒரு போதும் பின்வாங்காது என கூறினார். அவர் மேலும் கூறுகையில்.......

(வாய்ஸ் )

தேர்தல் ஆணையர் 2 (14)

(வாய்ஸ் )

இரட்டை வாக்களிப்பு குறித்து சிலர் குற்றம் சாட்டுவதாகவும், ஆனால், ஆதாரம் கேட்டால் எந்த பதிலும் வழங்குவதில்லை என அவர் கூறினார். இது போன்ற பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு தேர்தல்

ஆணையமோ அல்லது வாக்காளரோ பயப்படுவது இல்லை என்று அவர் குறிப்பிட்டார். ஏழைகள், பணக்காரர்கள், முதியவர்கள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் உட்பட அனைத்து பிரிவுகள் மற்றும் அனைத்து மதங்களை சேர்ந்த வாக்காளர்களுடன் தேர்தல் ஆணையம் எந்த பாகுபாடும் இல்லாமல் அச்சமின்றி நிற்கும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளார். மக்களவை தேர்தலின் போது 1 கோடிக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள், 10 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட வேட்பாளர்களின் வாக்குச் சாவடி முகவர்கள் செயல்பாட்டில் ஈடுபட்டதாக அவர் எடுத்துரைத்தார். இவ்வளவு வெளிப்படையான செயல்பாட்டில் மக்கள் முன்னிலையில் வாக்குகள் எவ்வாறு திருடப்படும் என்று அவர் கூறினார்.

தேர்தல் ஆணையர் 3 (8)

வாக்காளர் பட்டியலில் உள்ள பிழைகளை சரி செய்ய அனைத்து அரசியல் கட்சிகளும் கோரிக்கை விடுத்து வருவதாக தலைமை தேர்தல் ஆணையர் சுட்டிக்காட்டினார். சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த பணிகள் பீகாரில் இருந்து தொடங்கப்பட்டது என்றும், வாக்காளர் பட்டியலின் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். வாக்காளர்

பட்டியலில் உள்ள பிழைகளை சரி செய்ய அனைத்து வாக்காளர்களும், அரசியல் கட்சிகளும் குறிப்பிட்ட நேரத்திற்குள் தங்கள் பங்களிப்பை வழங்கி வருவதாகவும் தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

*ராகுல்காந்தி* (15)

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் என்ற போர்வையில் பீகாரில் வரவிருக்கும் சட்டமன்ற தேர்தல் ஏற்கனவே உள்ள வாக்காளர்களின் பெயர்களை நீக்கி, புதிய வாக்காளர்களை சேர்ப்பதன் மூலம் வாக்குகளை திருட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார். அவர் இன்று காலை பீகார் மாநிலம் சசாரத்தில் நடைபெற்ற வாக்காளர் உரிமை யாத்திரை தொடக்க விழாவில் பங்கேற்று பேசினார். இந்த உண்மை குறித்து நாடு முழுவதும் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். இதில், தேர்தல் ஆணையத்தின் பங்கு சந்தேகத்திற்கு உரியது என்றும் அவர் குற்றம் சாட்டினார். ஏழை மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு வாக்களிக்கும் உரிமை முதன்மையானது என்றும், அவற்றை திருட அனுமதிக்க மாட்டோம் என்றும் அவர் கூறினார். இப்பேரணியில் காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே, ஆர் ஜே டி தலைவர் திரு

தேஜஸ்வி பிரசாத் யாதவ், சிபிஐஎம்எல் தலைவர் திரு தீபங்கர் பட்டாச்சார்யா மற்றும் இந்திய கூட்டணியின் தலைவர்கள் பலர் பங்கேற்றனர்.

*முருகன்* (6)

தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கு மத்திய அரசு 10 லட்சம் கோடி ரூபாயை வழங்கி உள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். சென்னை கோயம்பேட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 22 ஆம் தேதி திருநெல்வேலியில் நடைபெறும் பூத் கமிட்டி மாநாட்டில், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பங்கேற்க உள்ளதாக தெரிவித்தார்.

*நுகர்வோர் குறை தீர்ப்பு 1* (5)

நாட்டில் நுகர்வோர் குறைகளை தீர்ப்பதில் ஒரு சாதனை அளவாக கடந்த ஜூலை மாதத்தில் 10 மாநிலங்கள் 100 சதவிகிதத்திற்கும் அதிகமான தீர்வு விகிதத்தை பதிவு செய்துள்ளதாக தேசிய நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்

வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ் )

*நுகர்வோர் குறை தீர்ப்பு 2* (11)

(வாய்ஸ் )

தேசிய நுகர்வோர் குறை தீர்ப்பு ஆணையம் கடந்த ஜுலை மாதத்தில் பதிவு செய்யப்பட்ட குறைபாடுகளை காட்டிலும், மிக அதிக அளவில் தீர்வு காணப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. தேசிய நுகர்வோர் குறை தீர்ப்பு ஆணையம் 122 சதவிகித தீர்ப்பு விகிதத்தை எட்டியுள்ள நிலையில், தமிழ்நாடு இதில் முதல் இடத்தை பிடித்துள்ளது. மாநிலத்தில் குறை தீர்ப்பு விகிதம் 277 சதவிகிதமாக உள்ளது. இதற்கு அடுத்தபடியாக, ராஜஸ்தான் மாநிலம் 214 சதவிகிதத்தை பெற்று 2 ஆவது இடத்தை பிடித்துள்ளது. தெலங்கானா 158 சதவிகிதத்தை பெற்று 3 ஆம் இடத்தில் உள்ளது. இமாச்சல பிரதேசம், உத்திரகாண்ட், மேகாலயா, கேரளா, புதுச்சேரி, சத்தீஸ்கர், உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் 100 சதவிகிதத்தை தாண்டி நுகர்வோர் குறைகளுக்கு தீர்வு கண்டுள்ளன.

*சந்திப்பு* (5)

இந்திய ராணுவத்தின் தென்னக படைப்பிரிவின் தலைமை அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் தீரஜ் சேத் இன்று புதுச்சேரியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை சந்தித்து பேசியுள்ளார். இந்த சந்திப்பின்போது மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளுக்கான தயார் நிலை ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

*டிரம்ப் 1* (13)

போரை முடிவுக்கு கொண்டு வர ரஷ்யாவிடம் உக்ரேன் ஒப்பந்தம் செய்ய முன்வர வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் வலியுறுத்தி உள்ளார். ரஷ்ய அதிபர் திரு புடினுடனான சந்திப்பிற்கு பின்னர் பேட்டியளித்த அவர், ரஷ்யா மிகப் பெரிய வல்லரசு என்றும், உக்ரேன் சமரசம் ஏற்படுத்திக் கொண்டு, ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் தமது பங்களிப்பு உக்ரேன் சார்பானது அல்ல என்றும் அவர் கூறினார். இருதரப்பினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்பதே தமது விருப்பம் என்றும் அவர் தெரிவித்தார். நேரடியாக அமைதி

ஒப்பந்தத்திற்கு செல்வது நிரந்தரமான போர் நிறுத்தத்திற்கு வழிவகுக்கும் என்றும், அவ்வப்போது நிறுத்தப்படும் சண்டை நிறுத்தங்களால் பயனில்லை என்றும் அவர் கூறினார். உக்ரேன் மட்டுமே அதன் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியும் என்று ஐரோப்பிய நாடுகள் வலியுறுத்தி உள்ளன.

வானிலை (14)

வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அம்மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இன்று காலை 8.30 மணியளவில் வடக்கு ஆந்திரபிரதேசம் மற்றும் தெற்கு ஒடிசா கடற்கரைக்கு அப்பால், மேற்கு மத்திய மற்றும் அதை ஒட்டிய வடமேற்கு வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளதாக தெரிவித்துள்ளது. இது, மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி, நாளை மறுநாள் அதிகாலை தெற்கு ஒடிசா-வடக்கு ஆந்திரபிரதேசம் இடையே கரையை கடக்க வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இடி-மின்னலுடன் கூடிய மிதமான மழை

பெய்ய வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓரிரு இடங்கயில் பலத்த தரைக்காற்று 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.